தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 20-2-2018

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**விவசாயிகளுக்கு எள் விதைப்பிற்கான விலை முன்னறிவிப்பு**

இந்தியாவில் பயன்படுத்தப்படும் சமையல் என்ணெய் மற்றும் உணவிற்கு பயன்படுத்தப்படும் எண்ணெய் வித்துக்களில் எள் முக்கியமான பயிர் ஆகும். உலகளவில், இந்தியா எள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றது. உத்திரபிரதேசம், இராஜஸ்தான், மத்தியபிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் எள் அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் விழுப்புரம், ஈரோடு, தஞ்சாவூர், கரூர், சேலம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் சித்திரைப்பட்டம், ஆடிப்பட்டம், கார்த்திகைப்பட்டம் மற்றும் மாசிப்பட்டம் ஆகிய பருவங்களில் எள் பயிரிடப்படுகிறது. டி.எம்.வி. 3, டி.எம்.வி 4, டி.எம்.வி 6, டி.எம்.வி 7, கோ 1 மற்றும் எச்.வி.பி.ஆர் 1, ஆகிய எள் இரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுகின்றன. ஆண்டின் மொத்த எள் உற்பத்தியில் 65 சதவீதம் எண்ணெய் தயாரிப்பதற்கும், 35 சதவீதம் உணவு தேவைகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது.

கடந்த கார்த்திகை பருவத்தில் தாமதமான / நீடித்த பருவ மழையால், எள் விதைப்பு சாதாரண பரப்பளவை விட குறைந்துள்ளது. மேற்கொண்டு, உடல் நலம் கருதி நுகர்வோர்கள் பாரம்பரிய முறையில் எடுக்கப்படும் எண்ணெயை விரும்புவதால் வரும் மாசிப்பட்டத்தில் விதைக்கப்படும் எள்ளிற்கு தேவைகள் அதிகளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இச்சூழலில், விவசாயிகள் விதைப்பு முடிவுகளை எடுக்க ஏதுவாக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின், வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தமிழ்நாடு பாசன விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் - விலை

முன்னறிவிப்புத் திட்டம், கடந்த 17 ஆண்டுகளாக ஈரோட்டில் உள்ள சிவகிரி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் நிலவிய எள் விலையை,சந்தை ஆய்வுகள் மேற்கொண்டது. ஆய்வுகளின் சந்தை மற்றும் விலை அடிப்படையில், அறுவடையின் போது (மே, 2018) தரமான எள்ளின் சராசரி பண்ணை விலை கிலோவிற்கு ரூ. 57 முதல் 60 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் மேற்கூறிய சந்தை ஆலோசனை அடிப்படையில், மாசிப்பட்டம் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி -0422-2431405

**தொழில்நுட்ப விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்**

பேராசிரியர் மற்றும் தலைவர்,
எண்ணெய் வித்துக்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் -0422-2450812

மக்கள் தொடர்பு அலுவலர்